தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 600 006.

ந.க. எண் 09502 /டி1/2012 நாள் 19.04.2012

பொருள் தமிழ்நாடு தொடக்கக் கல்வி சார்நிலைப்பணி – ஆசிரியர் பொது மாறுதல் – ஊராட்சி ஒன்றியம் / மாநகராட்சி / நகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்துவரும் ஆசிரியர்களுக்கு 2012–2013ஆம் கல்வி ஆண்டில் பொதுமாறுதல் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள அறிவுரை வழங்குதல் சார்பு.

****

2012–2013ஆம் கல்வி ஆண்டில் ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கு பொதுமாறுதல் வழங்குவதற்கு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் தயார் நிலையில் இருக்கும் பொருட்டு உதவி தொடக்கக் கல்வி அலுவலக விளம்பரப் பலகையில் ஒட்டி அதன் மூலம் ஆசிரியர்களிடம் மாறுதல் விண்ணப்பங்கள் பெறுவது சார்பாக கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1) இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுமாறுதல் விண்ணப்பத்தினை பயன்படுத்தி மாறுதல் கோரும்படி ஆசிரியர்களுக்கு தெரிவிக்க மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள், உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2) 30.04.2012–க்குள் ஆசிரியர்கள் தங்களது மாறுதல் விண்ணப்பங்கள் உரிய வழியில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

3) 05.05.2012 அன்று அனைத்து உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று 07.05.2012க்குள் சரிபார்த்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஏ, பி மற்றும் சி பதிவேடுகள் தயார் செய்ய வேண்டும்.

4) 10.05.2012 அன்று மாவட்ட மாறுதல் கோரும் ஆசிரியர்களின் விண்ணப்பங்களைப் பரிசீலித்து சார்ந்த மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளைப் பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொண்டு 2012–2013ஆம் ஆண்டு ஆசிரியர்கள் மாறுதலுக்கான விண்ணப்பங்களைப் பெறுதல் சார்ந்த பணியினை முடித்து தயார் நிலையில் இருக்குமாறு அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் இதன் மூலம் அறிவுறுத்தப்படுகிறது.

மாறுதல் சார்பான அரசாணை பெறப்பட்டவுடன் விரிவான அறிவுரைகள் வழங்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

இயக்குநர்.

பெறுநர்

அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.